## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை
## அசல் வழக்கு எண் – 13/2021

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 அய்யனார்** – திரு.என்.கார்த்திக், இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 11.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அய்யனார் | கிராமம் | மேலப்பகுதி கிராமம் |
| த/பெ / க/பெ. | முத்தரசு | தொழில் | ஊராட்சி செயலர் |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 53 |

**முதல் விசாரணை**

எனக்கு இவ்வழக்கில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது. மேலப்பகுதி கிராமம், சரகம்பட்டியை சேர்ந்த ஆறுமுகம் மகன் முருகேசன் என்பவர் கதவு எண் 8/49 என்ற ஓட்டுவில்லை வீட்டிற்கு வரி செலுத்தி வருகிறாரா என்றால் ஆமாம். எந்த வருடத்தில் இருந்து வரி செலுத்தி வருகிறார் என்றால், 2013 ல் இருந்து தற்போது வரை செலுத்தி வருகிறார். அதற்கான ஆவணங்களை கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டுவந்துள்ளேன். 2013–2014, 2019, 2020–2021, 2021–2022, 2022–2023, 2023–2024 ஆண்டுகளுக்கான வீட்டு வரி பதிவேடு **உண்மை நகல் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

கதவு எண் 8/49 ற்கு ஆறுமுகம் மகன் முருகேசன் என்பவருக்கு வரி ரசீது கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கதவு எண் 8/51 ற்கு அங்கமுத்து மகன் முருகேசன் என்பவருக்கு வரி ரசீது கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு வீடுகளும் எந்த சர்வே எண்ணில் உள்ளது என தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி இரண்டு வீடுகளிலும் அவரவர்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 2013–2014 வருடத்தில் கதவு

எண் 8/48 என்பது ஆறுமுகம் மகன் முருகேசன் பெயரில் இருந்தது. 2019ம் வருடம் மேற்படி கதவு எண் 8/49 என மாற்றப்பட்டது. அவ்வாறு மாற்றப்பட்டதற்கான ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**